

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீனஸ் நகர், ஜெயந்தி நகர் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு 8.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள குழாய் மூலம் கழிவுநீர் அகற்றும் திட்டம் மற்றும் உந்து நிலையம் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கார்த்திகேயன் சாலை, வெங்கடேசன் சாலை, மாதவரம் நெடுஞ்சாலை மற்றும் ராஜா தெரு ஆகிய பகுதிகளில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழைய குடிநீர் குழாயை மாற்றி புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், ஆணையர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகரில் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள 230/33 கிலோ வோல்ட் வளிமகாப்பு துணை மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, வி.செந்தில்பாலாஜி, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ப.ரங்கநாதன், மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், வில்லிவாக்கம் சந்திக்கடவு எண்.1க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதான சாலையையும் தெற்கில் ஐ.சி.எப். சாலையையும் இணைக்கும் வண்ணம் 61 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு மேம்பாலத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என். நேரு, வி. செந்தில்பாலாஜி, பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன்,பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள்

### ரூ.116.48 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்! ரூ.61.98 கோடி செலவில்

# கொளத்தூர் தொகுதியில் ‘மேயர் சிட்டிபாபு மேம்பாலம்’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 15-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகரில் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழைய குடிநீர் குழாயை மாற்றி புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 96 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, வில்லிவாக்கத்தில் 61 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு மேம்பாலத்தை திறந்து வைத்தார்.

எரிசக்தித் துறை சார்பில் கணேஷ் நகரில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

சென்னை பெருநகர மாநகராட்சியில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் மிக வேகமாக வளர்ந்துவரும் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த முக்கிய பகுதியாக விளங்கு கிறது. இப்பகுதியின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் கணேஷ் நகரில் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள 230/33 கிலோ வோல்ட் வளிமகாப்பு துணை மின் நிலையத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த துணை மின் நிலையம் அமைப்பதன் மூலம் கொளத்தூர், பெரியார் நகர், அன்னை நகர், கணேஷ் நகர் மற்றும் நேர்மை நகர் ஆகிய பகுதிகளுக்கு மின் கட்டமைப்பை வலுப்படுத்தவும், அதிகரித்து வரும் மின் தேவையை சீராக வழங்கவும் இயலும். இதன்மூலம் 3,19,000 மின்நுகர்வோர்கள் பயன்பெறுவார்கள்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கடேசன் சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; கார்த்திகேயன் சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 1 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; மாதவரம் நெடுஞ்சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழுதடைந்த பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 1 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; ராஜா தெரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழுதடைந்த பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 39 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி, என மொத்தம் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம். காலனி 34வது தெருவில் உள்ள காலி நிலத்தில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடம் கட்டும் பணி; ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் 33வது தெரு சந்திப்பில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16ஆம் நாள் காரிய கூடத்தில் கூடுதலாக உணவு அருந்தும் கூடும் கட்டும் பணி; ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் அமைந்துள்ள மின்சார மயான பூமியை 41 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திரவ பெட்ரோலிய வாயு மயான பூமியாக மாற்றும் பணி, என மொத்தம் 96 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**வில்லிவாக்கம் இரயில் நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள “மேயர் சிட்டிபாபு மேம்பாலம்” திறந்து வைத்தல்.**

கொளத்தூர் மற்றும் வில்லிவாக்கம் பகுதியில் வசிக்கும் மக்கள் சந்திக்கடவு எண்.1 அடிக்கடி மூடப்படுவ தால் அதனை கடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர். எனவே, பொதுமக்களின் சிரமத்தை நீக்கும் வகையில் வில்லிவாக்கம் சந்திக்க டவு எண்.1க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதான சாலையையும், தெற்கில் ஐ.சி.எப். சாலையையும் இணைக்கும் வண்ணம் 61 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 500 மீட்டர் நீளம் மற்றும் 8.50 மீட்டர் அகலத்தில் கட்டப்பட்டுள்ள இருவழி மேம்பாலத்திற்கு “மேயர் சிட்டிபாபு மேம்பாலம்” எனப் பெயர் சூட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேயர் சிட்டிபாபு என்று அழைக்கப்படும் சொக்கலிங்க சிட்டிபாபு அவர்கள் 1967 மற்றும் 1971ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகராட்சிக்கு முதன் முதலில் 1958ஆம் ஆண்டு மாமன்ற உறுப்பினராகவும், பின்னர் 1964ஆம் ஆண்டு சென்னை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியினை சிறப்பாக மேற்கொண்டார். மேயர் சிட்டிபாபு அவர்கள் 1976 ஆம் ஆண்டு மிசா சட்டத்தின் படி கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, அங்கு ஏற்பட்ட காயங்க ளால் 1977ஆம் ஆண்டு உயிரிழந்தார். மறைந்த மேயர் சிட்டிபாபு அவர்களை சிறப்பிக்கும் வகையில் வில்லிவாக்கம் அருகில் கிழக்கு சந்திக்கடவு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு “மேயர் சிட்டிபாபு மேம்பாலம்”எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இம்மேம்பாலமானது, கொளத்தூர் பகுதியை அண்ணா நகர் பகுதியுடன் இணைக்கும் முக்கிய இணைப்பு பாலமாகும். இம் மேம்பாலத்தினால் கொளத்தூர் ஜி.கே.எம். காலனி, பெரியார் நகர், கொரட்டூர் பாடி, ஐ.சி.எப். அண்ணா நகர் மற்றும் பெரம்பூர் பகுதிகளை சார்ந்த சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் திட்டப்பகுதியில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட 51 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

முன்னதாக, ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர், வீனஸ் நகர், ஜெயந்தி நகர் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு பாதாள குழாய் மூலம் கழிவுநீர் அகற்றும் திட்டம் மற்றும் உந்து நிலையம் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஆண்டிமடத்தில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம்!

*அரியலூர், மே 15-*

*ஆண்டிமடம் வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் விளந்தை கலைஞர் திடலில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டுதலின்படி கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஆண்டிமடம் வடக்கு ஒன்றிய செயலாளர் ரெங்க.முருகன் தலைமையில் நடைபெற்றது.*

*முன்னதாக ஒன்றிய பொருளாளர் மு.கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.*

*மாவட்ட இலக்கிய அணி புரவலர் ஆ.இராமதாஸ், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், மாவட்டப் பிரதிநிதிகள் சிவஜோதி, உதயகுமார், குணசேகரன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் இராமலிங்கம், விஜய், பவாணி, செந்தில்குமார் ஒன்றிய இளைஞரணி அமைல்பாளர் சதீஷ், இளங்கோவன், அசோக் சுரேந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் குடியாத்தம்பாரி, ஆண்டிமடம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர். கே. கலியபெருமாள் சிறப்புரையாற்றினார்கள்.*

*இக்கூட்டத்தில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், மாவட்ட சிறுபான்மை நல அணி அமைப்பாளர் அந்தோணிசாமி, பேரூராட்சி மன்றத் தலைவர் மார்கிரேட் அல்போன்ஸ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஆப்ரகாம், எம்.ஜி.பழனிவேல், இளையராஜா, தொ.மு.ச. தலைவர் கொளஞ்சி, அருணா சம்பத், தொ.மு.ச. இளங்கோவன், கந்தசாமி, சண்முகம், இராஜேந்திரன், முத்துகுமரசாமி, அழகேசன், சேகர், ராஜேந்திரன், செல்வகுமார், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், ஊர் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.*



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திராவிடச் சூரியன் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மா.சீனிவாசா தொகுத்த “இந்தியாவின் முதன்மை முதல்வர் மு.க.ஸ்டாலின்” என்ற நூலினை வெளியிட, கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் பெற்று கொண்டார்.

## ‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!




### பொறியியல் படிப்புகளில் சேர

## 1 லட்சம் மாணவர்கள் விண்ணப்பம்!

*சென்னை, மே 15-*

*கடந்த 8 நாள்களில் 91 ஆயிரத்து 38 விண்ண ப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இன்று அது 1 லட்சத்தை கடந்து அவர்களில் 46 ஆயிரத்து 10 பேர் கட்டணம் செலுத்தி உள்ளனர். பொறியியல் படிப்புக்கான விண்ணப்பப் பதிவு ஜூன் 4ந்தேதியுடன் நிறைவடைய உள்ளது.*

*தமிழகத்தில் பொறியியல் படிப்புகளில் சேர்க்கை பெற கடந்த 8 நாள்களில் 91 ஆயிரத்து 38 விண்ணப்பங்கள் பெறப்பட்டு உள்ளன. இன்று அந்த விண்ணப்பங்கள் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டியது. தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகள், சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 2023-24ம் கல்வியாண்டில் பி.இ., பி.டெக்., பி.ஆர்க்., பட்டப்படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கான விண்ணப்ப பதிவு கடந்த மே 5ந்தேதி முதல் தொடங்கியது. இதையடுத்து மாணவ, மாணவிகள் HTTPS://WWW.TNEAONLINE.ORG, HTTPS://WWW.TNDTE.GOV.IN என்ற இணையதளங்கள் மூலம் விண்ணப்பித்து வருகின்றனர்.*

